FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| புவியியல் - I | தரம் :- 13(2017) | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|


**அறிவுறுத்தல்கள் :-**

- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி I, 30 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
  பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I மற்றும் பகுதி II ஆகியவற்றிற்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

### பகுதி - I

❖ **ஒவ்வொரு** வினாவிற்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தினை எதிரேயுள்ள** புள்ளிக்கோட்டில் எழுதுக.

1.




மேலே ABCD என்ற எழுத்துக்களால் காட்டப்பட்டிருக்கும்நிலவுருவங்கள் முறையே

1) A) ஆரைவடிகால் B) மியாந்தர் C) கங்கணவடிகால் D) சிறுகுன்று
2) A) கங்கணவடிகால் B) மியாந்தர் C) ஆரைவடிகால் D) சிறுகுன்று
3) A) ஆரைவடிகால் B) மியாந்தர் C) சட்டத்தட்டுவடிகால் D) நீள்குன்று
4) A) மரநிகர்வடிகால் B) மியாந்தர் C) சட்டத்தட்டுவடிகால் D) கூம்புக்குன்று
5) A) ஆரைவடிகால் B) மியாந்தர் C) மரநிகர்வடிகால் D) சிறுகுண்று

2. கரையோரத்திலிருந்து கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் ஒடுங்கிய நிலப்பகுதி.
   1) தீவு 2) குடா 3) முனை 4) களப்பு 5) ஆற்றுமுகம்

3. 1:50,000 இடவிளக்கப்படத்தில் 15cm ஆகக் காணப்படும் வீதியொன்றின் நீளம் உண்மையான நிலப்பிரதேசத்தில் குறிக்கும் தூரத்தினைக் km தருக.
   1) 8.5km 2) 7.5km 3) 6 km 4) 5 km 5) 3 km

4. பூகோள இடநிர்ணய முறைமையில், இட அமைவினை அறிவதற்கு 24 செய்மதிகள் பூமியை வலம் வருகின்றன. இடவமைவின் துல்லியத் தன்மையைச் சிறப்பாக காட்டுவதற்கு இச்செய்மதியின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது. அவ் எண்ணிக்கை யாது?
   1) 26 2) 35 3) 34 4) 30 5) 25

5. பூகோள இடநிர்ணய (G.P.S) முறைமையின் பிரதான கூறுகள்
   1) வன்பொருள், மென்பொருள், தரவு
   2) தரவு, விண்வெளிக்கூறு, பயனாளர்
   3) கட்டுப்பாட்டுப்பகுதி, தரவு, பயனாளர்
   4) விண்வெளிக்கூறு, கட்டுப்பாட்டுப்பகுதி, பயனாளர்
   5) மென்பொருள், கட்டுப்பாட்டுப் பகுதி, பயனாளர்

6. இடம்சார் தரவுகளில் பயன்படுத்தப்படும் இரு மாதிரிகளும் எவை
   1) நெய்யரித்தரவு, எண்ணிலக்கத்தரவு
   2) இடம்சாராத்தரவு, காவித்தரவு
   3) எண்ணிலக்கத்தரவு, இடம்சாராத்தரவு
   4) மாதிரித்தரவு, நெய்யரித்தரவு
   5) காவித்தரவு, நெய்யரித்தரவு

7. வீச்சு எனப்படுவது
   1) கூடிய பெறுமானத்திற்கும் குறைந்த பெறுமானத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடு
   2) ஒரு எண்கணிதத்தரவுத் தொகுதியின் நடுப்பெறுமானம்
   3) ஒரு எண்கணிதத் தரவுத் தொகுதியில் அதிக தடைவ இடம் பெறுவது
   4) எண்கணிதத்தரவுத் தொகுதியின் எண்களைக் கூட்டி அதன் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் பெறப்படுவது.
   5) மீடிறனுடன் அதற்குக்கீழுள்ள வகுப்பாயிடையின் மீடினைக் கூட்டி பெறப்படுவது.

8. மையப்போக்கு அளவீட்டைக் காட்டும் பிரதான அளவைகள்
   1) ஆகாரம், இடை, இடையம்
   2) சராசரிவிலகல், நியமவிலகல், காலணை வீச்சு
   3) ஆகாரம், இடைவிலகல், சராசரிவிலகல்
   4) நியமவிலகல், இடை, ஆகாரம்
   5) இடையம், நியமவிலகல், காலணைவீச்சு

9. சமகணியக் கோட்டுப் படங்கள் மூலம் காட்டப்படும் விடயங்கள்
   1) காடு, மண், குடித்தொகை, நீரியல் அம்சங்கள்
   2) அமுக்கம், மண், மழைவீழ்ச்சி, குடித்தொகை
   3) மண், காடு, ஆழம், கனிய வளப்பரம்பல்
   4) அமுக்கம், வெப்பம், மழைவீழ்ச்சி, ஆழம்
   5) வெப்பம், மழைவீழ்ச்சி, ஆழம், மண்

10. வெப்பநீரோட்டம், குளிர்நீரோட்டம் பாதுகாப்பட்ட வனம் போன்றவற்றைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறங்கள் முறையே,
   1) பச்சை, நீலம், கறுப்பு  2) பச்சை, நீலம், கறுப்பு  3) சிவப்பு, நீலம், கறுப்பு
   4) சிவப்பு, கறுப்பு, பச்சை  5) மஞ்சள், கறுப்பு, சிவப்பு

11. கெப்பனின் காலநிலைப்பாகுபாட்டில் மத்திய தரைக் காலநிலையைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் ஆங்கில எழுத்து
   1) A  2) B  3) C  4) D  5) E

12. தற்காலத்திலுள்ள கண்டத்தகடுகளின் உருவாக்கம், தின்னலுக்கு உட்பட்ட கடற்கரை, புதியகடற்கரை அடையல், வண்டல், களப்பு, சதுப்பு நிலம், முற்றா நிலக்கரி போன்றன உருவாகிய ஹொலோசீன் காலத்தின் யுகம்.
   1) ஆகியே சோயிக் யுகம்  2) பெலியோ சோயிக் யுகம்  3) கைனோ கோயிக் யுகம்
   4) செனோ கோயிக் யுகம்  5) மெசோ சோயிக் யுகம்

13. எரிமலை தொடர்பான ஆய்வும், எரிமலைப் பரவலைப்பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்ற கருவி முறையே
   1) வல்கனோலஜி, சாய்வு மானி (Tilt meter)
   2) கெசினோமானி, காற்று விசை மானி
   3) சாய்வுமானி, காற்று விசை மானி
   4) பெதடோலஜி, வல்கனோலஜி
   5) பெதடோலஜி, செசினோமானி

14. ஊடுவடிதல் மூலம் கீழ் வடிந்து செல்லும் நீர்ப்பகுதி தரைக்கீழ் நீராகச் சேமிக்கப்படும் அந்நீருக்கு வழங்கப்படும் பெயர்
   1) தரைகீழ் நீர் 2) மயிர்த்துளைநீர் 3) சுவர் நீர் 4) மேலதிக நீர் 5) மக்காநீர்

15. பாறைகளால் சூழப்பட்ட பாலைவனப் பகுதி அழைக்கப்படுவது
   1) மணல் பாலை வனம் 2) கற்பாலை வனம் 3) வெப்பப்பாலை வனம்
   4) ஹமாடா 5) குளிர்ப்பாலை வனம்

16. வளிமண்டல பொதுச்சுற்றோட்டத்தில் உள்ளடங்கும் காற்றுக்கள்
   1) வியாபாரக்காற்று, மேலைக்காற்று, முனைவுக்காற்று
   2) கச்சான் காற்று, வடகீழ்பருவக்காற்று, சூழல்காற்று
   3) வியாபாரக்காற்று, வடகீழ்பருவக்காற்று, சூழல்காற்று
   4) தென் மேல் பருவக்காற்று, மேற்காவுகை, சூழல் காற்று
   5) கச்சான் காற்று, வாடைக்காற்று, முனைவுக்காற்று

17. 2017ஆம் ஆண்டு குப்பைமேடுச்சரிவு இலங்கையில் மானிட அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசம்
   1) மீரியாகொட 2) மீதொட்டமுல்ல 3) ஹல்துமுல்ல 4) அரநாயக்க 5) மீரிகம

18. இலங்கையில் சுண்ணக்கற்பாறைகள் அதிகளவில் பரம்பிக் காணப்படும் பிரதேசம்
   1) புத்தளத்திலிருந்து முல்லைத்தீவு வரை
   2) வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு வரை
   3) சிலாபத்திலிருந்து புத்தளம் வரை
   4) புத்தளத்திலிருந்து முல்லைத்தீவு வரை
   5) புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை

19. பின்வருவனவற்றில் பச்சை வீட்டு வாயுக்கள்
   1) காபனீரொக்சைட், நைதரசன், மீதேன்
   2) சல்பர் ஹெக்ஸாபுளோரைட், ஆகன், மீதேன்
   3) நீராவி, ஓசோன், ஆகன்
   4) நைட்ரஸ் ஆக்சைட், காபனீரொக்சைட், மீதேன்
   5) நீராவி, நைதரசன், ஆகன்

20. இலங்கையில் கனிய மணற்படிவுகள் காணப்படும் இடங்கள்
   1) எப்பாவெல, சேருவில, புல்மோட்டை
   2) புல்மோட்டை, கைக்காவெல, பொல்கொட்டுவ
   3) பொல்கொட்டுவ, கைக்காவெல, காலி
   4) காலி, சேருவில, எப்பாவெல
   5) எப்பாவெல, காலி, மட்டக்களப்பு

21. 2014 - 2050 களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் அதிகளவான நகர சனத்தொகையைக் கொண்டிருக்கும் நாடுகள் என ஐக்கிய நாடுகள் சபை எதிர்வு கூறியிருக்கும் நாடுகளின் தொகுதி
   1) இந்தியா, சீனா, நைஜீரியா 2) பிறேசில், ஜப்பான், இலங்கை
   3) பிரித்தானியா, இந்தியா, சீனா 4) பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா
   5) இந்தியா, சீனா, சூடான்

22. கோத்திர மொழியைப் பேசும் மக்கள் அதிகளவில் பரம்பிக் காணப்படும் கண்டம்
1) ஆசியா 2) அவுஸ்ரேலியா 3) தென் அமெரிக்கா
4) வடஅமெரிக்கா 5) ஆபிரிக்கா

23. நகர வளர்ச்சியின் படிமுறை
1) நகரம், நகரத்தொகுதி, கூட்டுநகர், மாநகரம்
2) மாநகரம், நகரத்தொகுதி, பெருநகரம், கூட்டு நகரம்
3) நகரம், பெருநகரம், கூட்டு நகரம், நகரத்தொகுதி
4) நகரம், கூட்டுநகரம், நகரத்தொகுதி, பெருநகரம்
5) பெருநகரம், கூட்டுநகரம், நகரத்தொகுதி, நகரம்

24. ஆபிரிக்கப் பிரதேசங்களுக்கு என சிறப்பாக அறிமுகம் செய்யப்பட்ட நெல் இனம்
1) H4 நெல் இனம் 2) 1R 3C நெல் இனம் 3) 1R 8 நெல் இனம்
4) நெரிகாஸ் நெல் இனம் 5) BG 11 நெல் இனம்

25. உலக உணவு விவசாய அமைப்பின் (FAO) தலைமையகம் அமைந்துள்ளது நாடும் நகரமும் முறையே
1) இத்தாலி - ஜெனோவா 2) ஓஸ்ரியா - வியன்னா 3) ஐக்கிய அமெரிக்கா -நியூயோர்க்
4) இத்தாலி - ரோம் 5) ஐக்கிய அமெரிக்கா - பொஸ்தன்

26. உலகின் மிக உயர்தர காரியம் கிடைக்கும் நாடு
1) இலங்கை 2) பாகிஸ்தான் 3) சீனா 4) ஜப்பான் 5) இந்தோனேசியா

27. பாற்பண்ணைக் கைத்தொழில் சிறப்பாக இடம் பெறும் தென்அமெரிக்கா, வடஅமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஆசியா, கண்டங்களில் உள்ள புல்வெளிகள் முறையே
1) ஸ்ரெப்பீஸ், டவுண்ஸ், வெல்ட், பிரேரிஸ்
2) கம்பஸ், பிரேரிஸ், டவுண்ஸ், ஸ்ரெப்பீஸ்
3) டவுண்ஸ், வெல்ட், ஸ்ரெப்பீஸ், பிரேரிஸ்
4) பிரேரிஸ், கம்பஸ், வெல்ட், டவுண்ஸ்
5) டவுண்ஸ், பிரேரிஸ், லானோஸ், வெல்ட்

28. எக்ஸ்ரநெட் (Extranet) எனப்படுவது
1) நிறவனமொன்றில் உள்ளார்ந்த கணினி அனைத்தையும் ஒன்றிணைத்து தகவல் பரிமாறும் செய்தித் தொகுதி
2) செய்மதிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்
3) சில நிறுவனங்கள் ஒன்றிணைந்து தயாரிக்கும் கணினித் தொகுதி.
4) செய்மதி, தொலைபேசி, டேலர் இயந்திரத்தினைப் பயன்படுத்தி வங்கி நடவடிக்கைகளில் ஈடுவடுவது.
5) மிகவிரைவாக எழுத்துருவான தகவல்களைப் பரிமாறிக் கொள்வது

29. உலக சனத்தொகையில் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் வாழ்கின்ற சனத்தொகையின் அண்ணளவான சதவீதம்
1) 90% 2) 88% 3) 80 4) 75% 5) 70%

30. இலங்கையில் சமையலுக்கு அதிகமாகப் பயன்படும் சக்தி வளங்கள் முறையே
1) விறகு, எல்.பி.வாயு, மண்ணெய் 2) மண்ணெய், விறகு, எல்.பி.வாயு
3) எல்.பி.வாயு, மின்சாரம், விறகு 4) உயிரியல்வாயு, விறகு, மின்சாரம்
5) மின்சாரம், உயிரியல் வாயு, விறகு

## பகுதி – II

❖ **முதலாம் வினாவிற்கும் 2ஆம் 3ஆம் வினாக்களில் இருந்து தெரிந்தெடுத்து இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

❖ ***1 : 50000 அளத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது.***

***01.*** இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட *1 : 50,000* என்னும் அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளிகள் *100* அடியாகும். இப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு :-

- ❖ படத்தின் மேல் விடைகள் எழுதப்படலாகாது
- ❖ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- ❖ விடைத்தாளுடன் உமது படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) *1 – 6* வரை குறித்துக் காட்டப்பட்டிருக்கும் பௌதிக பண்பாட்டு அம்சங்களைப் பெயரிடுக. *(3 புள்ளிகள்)*

(ii) உமக்குத் தரப்பட்ட படப்பிரதேசத்தின் வடிகால் பாங்கினைச் சுருக்கமாக விபரிக்குக. *(4 புள்ளிகள்)*

(iii) உமக்கு வழங்கப்பட்ட பிரதேசம் உள்ளடக்கி இருக்கும் இருமாவட்டங்களைத் தருக. *(1 புள்ளிகள்)*

(iv) இப்பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கைகள் நான்கு குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

(v) அ. பொருளாதார நடவடிக்கைகளுக்கும் தரைத் தோற்றத்திற்கு மிடையிலான இடைத் தொடர்பினை சுருக்கமாக விளக்குக. *(5 புள்ளிகள்)*

ஆ. படப்பிரதேசத்தில் குடியிருப்புப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு காரணிகளை வரையறுக்க. *(5 புள்ளிகள்)*

02. (i) செய்மதிப் படிமம் (Satellite Image) என்றால் என்ன? *(2 புள்ளிகள்)*

(ii) செய்மதிப் படிமத்திற்கும் படமொன்றிற்கும் இடையில் காணப்படும் மூன்று வேறுபாடுகளைக் குறிப்பிடுக. *(6 புள்ளிகள்)*

(iii) பூகோள நிலைப்படுத்தல் முறைமைத் தொழில்நுட்பத்தின் மூன்று பயன்பாடுகளை விபரிக்குக. *(6 புள்ளிகள்)*

(iv) புவியியல் தகவல் முறைமையில் காணப்படும் பிரதான உள்ளடக்கக் கூறுகளைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

*03.* (i) அட்டவணை *1* இல் புவியியல் பாடத்தில் *30* மாணவர்கள் பெற்ற புள்ளிகளை தரப்பட்டுள்ளன. அதனைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அட்டவணை *1*

புவியியல் பாடத்தில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள்

*51, 45, 69, 41, 25, 90, 52, 36, 22, 48*

*60, 62, 73, 82, 31, 78, 71, 55, 67, 52*

*48, 58, 39, 59, 67, 51, 53, 28, 47, 71*

(ii) அ. மேற்படி தரவினைப் பயன்படுத்தி மீடிறன் பரம்பல் அட்டவணை ஒன்று தயாரிக்க? *(3 புள்ளிகள்)*

ஆ. திரள் மீடிறனைக் கணிக்க. *(3 புள்ளிகள்)*

(iii) அ. தரவினைப் பயன்படுத்தி இழைவரையம் ஒன்றினை வரைக. *(6 புள்ளிகள்)*

ஆ. மீடிறன் பல்கோணியை வரைக. *(3 புள்ளிகள்)*

(iv) மாணவர்களின் புவியியல் பாடத்தில் பெற்றபுள்ளிகளின் போக்குத் தொடர்பாக விளக்குக.

*(5 புள்ளிகள்)*

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | புவியியல் - II | நேரம் :- மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு வினாக்காளையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி – I
### பௌதிகப் புவியியல்

01.

(i) புவியோட்டின் மூன்று வகையான குறைகளையும் (Faults) மூன்று வகையான மடிப்புக்களையும் ( Folds) பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) இழுவிசை மூலம் குறைகள் உருவாகின்ற முறையினை விளக்கப் படங்களின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) அ) எரிமலை என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ஆ) எரிமலை வெடிப்பினால் உருவாகின்ற தள்ளல், தலையீட்டு நிலவுருவங்களைக் குறிப்பிட்டு அவற்றின், உருவாக்கச் செயன் முறையை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) எரிமலை வெடிப்பினால் ஏற்படுகின்ற விளைவுகளைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

**02.**

(i). அ. ஆறு ஒன்றின் நீள் கோட்டும் பக்கப்பார்வையினைக் காட்டும் புனையா வரைபடம் ஒன்றினை வரைக. (2 புள்ளிகள்)

ஆ. நீள்கோட்டுப் பக்கப்பார்வையின் மூன்று பிரதான கட்டங்களைக் ( Phases) குறித்துக் காட்டுவதுடன் அக்கட்டங்களுள் இனங்காணக் கூடிய ஒவ்வொரு செயன்முறைகளைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) ஆறு ஒன்று அரித்த பருப் பொருட்களை (சுமைகளைக்) கொண்டு செல்லும் வழிமுறைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (3 புள்ளிகள்)

(iii) ஆற்றரிப்பினால் உருவாக்கப்படுகின்ற மூன்று நிலவுருவங்களின் உருவாக்கச் செயன் முறையை விளக்கப் படத்தின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) ஆற்றரிப்பினால் உருவாக்கப்படுகின்ற மூன்று படிதல் நிலவுருவங்களைக் குறிப்பிட்டு அவற்றின் உருவாக்கச் செயன் முறைகளை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

03.

(i) “ காலநிலை மாற்றம்” என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளிகள்)

(ii) எல் - நினோ ( EL.Nino) லா - நினா (LA-Nina) என்பதனைச் சுருக்கமாக விளக்கி அதனால் ஏற்படும் பாதிப்புக்களை விபரிக்குக. (6 புள்ளிகள்)

(iii) அ. காலநிலை மற்றத்தினால் பாதிக்கப்படும் துறைகள் நான்கு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ. “காலநிலைமாற்றம்” தொடர்பாக உலக நாடுகள், இலங்கை மேற்கொண்ட முயற்சிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(iv) அ. இயற்கை வளங்களையும் உயிர்ப்பல்வகைமையையும் காலநிலை மாற்ற விளைவுகளில் இருந்து பாதுகாப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

ஆ. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைக் குறைப்பதற்கு, நாட்டின் நற்பிரஜை என்ற வகையில் நீர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

04. (i) அ."உயிர்ப்பெருந்திணிவு" என்பதனை வரைவிலக்கணம் செய்க. (1 புள்ளி)

ஆ. அயனமழைக்காடுகள் பரம்பியுள்ள நாடுகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

இ. அயனமழைக் காட்டுப் பிரதேசத்தின் காலநிலைப் பண்புகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)


(ii) அயனமழைக்காட்டுத் தாவரங்களின் பண்புகள் நான்கு குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) அயனமழைக்காடுகள் பரந்துள்ள பிரதேசங்களின் பரப்பளவு இன்று குறைவடைந்து செல்வதில் பங்களிப்புச் செய்யும் மனித நடவடிக்கைகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iv) இலங்கையில் காட்டுவளத்தினைப் பேணிப்பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி – II
## மானிடப் புவியியல்

05. சனத்தொகைக் கூம்பின் நான்கு காலகட்டத்திற்குரிய படங்கள் கீழே தரப்பட்டுள்ளது .அதனை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




(i) சனத்தொகைக் கூம்பின் நிலை 1,2,3 (Stage1,2,3) இன் பண்புகளைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

(ii) நிலை 4 (Stage 4) இன் பண்புகளைக் குறிப்பிட்டு அந்நிலையினை அடைந்துள்ள நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நான்கு குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளிகள்)

(iii) இலங்கையின் குடித்தொகையில் வயது முதிர்ந்த பிரிவினரது சதவீதம் அதிகரித்து வருகின்றது. மேற்படி அதிகரிப்பிற்கு பங்களித்த இரண்டு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

06. (i) குடியிருப்பு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ii) இலங்கையின் பின்வரும் குடியிருப்புக்களில் காணப்படும் இரண்டு முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக.

1. பெருந்தோட்டக் குடியிருப்புக்கள்
2. புரதான கிராமக் குடியிருப்புக்கள் (6 புள்ளிகள்)

(iii) வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் விரைவான நகராக்கத்திற்கான காரணிகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) இலங்கையின் மெதுவான நகரவளர்ச்சிக்கான மூன்று அடிப்படைக் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

07. (i) உலகின் கைத்தொழில் இடஅமைவில் செல்வாக்குச் செலுத்தும் பௌதிகக் காரணிகள், மானிடக் காரணிகளைத் தருக. (4 புள்ளிகள்)

(ii) அ. உயர் தொழில்நுட்ப கைத்தொழிலின் (High Tech industries) ஒரு பிரிவாகிய இலத்திரனியல் கைத்தொழிலில் ஈடுபடும் நான்கு நாடுகளைத் தருக? (2 புள்ளிகள்)

ஆ. இக்கைத்தொழிலின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் இடவமைவுக் காரணிகளில் இன்று போக்குவரத்து பிரதான இடத்தைப் பெறுகின்றது. உதாரணங்களுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

(iv) கப்பல் கட்டும் கைத்தொழிலின்

அ. அண்மைக் காலப்போக்குகள். (4 புள்ளிகள்)

ஆ. பிரச்சினைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

08. (i) அ. இலங்கைக்கு அதிகளவில் வருகை தருகின்ற சுற்றுலாப் பிரயாணிகளின் நாடுகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

ஆ. இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கான காரணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(ii) சுற்றுலாக் கைத்தொழிலின் விருந்தியினால் இலங்கை பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மை நான்கு குறிப்பிட்டு விளக்குக. (8 புள்ளிகள்)

(iii) சுற்றுலாக் கைத்தொழிலின் விருத்தியினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(4 புள்ளிகள்)

(iv) சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சியை மேம்படுத்த இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

The National e-Learning Portal for The General Education